**தலைப்பு – 133 – தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இவ் அறிக்கையின் 1 ஆம் பந்தி மற்றும் 2 ஆம் பந்தியில் அமைச்சின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தியில் தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புகள் காண்பிக்கப்பட்டுள்ளன.

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 யூன் 23 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய

பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும், இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரியவகையிலான உள்ளகக்கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தல் இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்குகள்**

**மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவினங்கள்**

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 3,917.10 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 3,655.82 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் படி, தேறிய ஏற்பாட்டில் ரூபா 261.28 மில்லியன் அதாவது 7 சதவீத ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டு வருபவை | 1,396.13 | 1,285.91 | 110.22 | 7.89 |
| மூலதனம் | 2,520.97 | 2,369.91 | 151.06 | 5.99 |
| **மொத்தம்** | **3,917.10** | **3,655.82** | **261.28** | **6.67** |

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்குரிய 13301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் பின்வருமாறு காணப்பட்டன.

| செலவுகள் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ள படியானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ள படியானது | உச்ச எல்லை | உள்ள படியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 24.00 | 24.22 | 10.00 | 13.55 | 75.00 | 59.09 |

**2.3 பொதுவைப்புக் கணக்கு**

அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்குகளின் மீதி ரூபா 12.83 மில்லியன் ஆகக் காணப்பட்டது.

**2.4 கணக்காய்வு அவதானிப்பு**

2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை மற்றும் புத்தகங்களின் படி, தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று தொடர்பான கணக்காய்வு அவதானிப்பு 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளுக்கு அமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் போதிய மற்றும் முக்கிய அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ளன.

## 3. தலைப்பு – தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு

---

### 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்பட்டிராமை

---

1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

பாதீட்டு முரண்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 6 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 9,623,000 தொகையான மொத்த தேறிய நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 40 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்பு அச் செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாட்டில் 10 சதவீதத்திலிருந்து 98 சதவீதம் வரையான வீச்சளவைக் கொண்டிருந்தது.

### 3.3 சொத்து முகாமைத்துவம்

---

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தல்

---

2014 ஒக்டோபர் 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் படி, 2014 வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2015 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட

வேண்டிய போதிலும் அமைச்சினால் 2015 மே 31 ஆம் திகதி வரையிலும் அவ்வறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 ஆம் ஆண்டிற்காகவே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) கையேற்கப்படாத சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படல்

---

நெநோ தொழில்நுட்ப தோட்டத்தை ஸ்தாபிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த 50 ஏக்கர் காணிக்காக ரூபா 304.07 மில்லியன் தொகை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது. இக் காணியில் 48 ஏக்கர்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்ததுடன் காணியின் உரிமை முறையான வகையில் கையேற்கப்படாத காணியில் ரூபா 823.6 மில்லியன் தொகை செலவில் தொழில்நுட்ப தோட்டம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

3.4 உள்நாட்டு நிதியீட்டலின் மூலம் செயற்திட்டம் செயற்படுத்தல்

---

செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடல், செயற்திட்ட நிர்மாணிப்புகளிலான தாமதம், செயற்திட்டம் குறித்த தினத்தில் ஆரம்பிக்கப்பட்டிராமை, கால தாமதத்தை அடுத்து வேலை ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம் தொடர்பாக கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் கண்டறியப்பட்ட அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாது கைவிடப்படல்

---

ரிதீமாலியத்த ‘‘விதாதா சம்பத்’’ நிலையத்தில் ‘‘விதாதா’’ உத்தியோகத்தர் ஒருவரின் வெற்றிடம் காரணமாக மீளாய்வாண்டின் போதும் அமைச்சால் நிர்மாணிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த கட்டிடத்தின் நிர்மாணிப்புகளை ஆரம்பித்திருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்

அமைச்சால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | பூர்த்தியாக்கப்பட வேண்டிய திகதி | பூர்த்தியான திகதி | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | | | | ரூபா | |
| முசலி விதாத்தா வள நிலையக் கட்டிட நிர்மாணிப்பு | 8,163,058 | 2012 சனவரி | 2012 செப்தெம்பர் 14 | பூர்த்தியடையவில்லை | 2,869,816 | நிர்மாணிப்புகள் ஒப்பந்தக்காரரின் மந்த கதியால் 2014 ஆம் ஆண்டிற்கு குறைவேலையாகக் காணப்பட்ட போதிலும் 2014 ஆம் ஆண்டின் போதும் அவ் வேலை பூர்த்தியடைந்திருக்கவில்லை. |
| இரண்டாம் தரப்பு மற்றும் பல்தரப்பு விதாதா மற்றும் தொழில்நுட்ப ஒன்றிணைவு நிகழ்ச்சித்திட்டம் | 64,132,600 | 2011 செப் தெம்பர் 22 | 2014 செப்தெம்பர் 22 | பூர்த்தியடைந்திருக்கவில்லை | 31,588,178 | நிபுணர்களின் பற்றாக்குறை மற்றும் மிகையான வேலை |

(இ) செயற்திட்டம் குறித்த தினத்தில் ஆரம்பிக்கப்பட்டிராமை

பின்வரும் ‘‘விதாதா’’ வளங்கள் நிலையக் கட்டிடம் மீளாய்வாண்டின் போது நிர்மாணிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 2015 யூன் 23 ஆம் திகதி வரையிலும் நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- கொட்டவெஹெர
- மன்னார் நகரம்
- மாலிம்பட

(ஈ) காலதாமதத்தின் பின்னர் வேலை ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம்

பின்வரும் ‘‘விதாதா’’ வளங்கள் நிலையக் கட்டிடம் மீளாய்வாண்டின் போது நிர்மாணிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றின் நிர்மாணிப்பு நடவடிக்கைகளின் ஆரம்பிப்பு 2015 ஆம் ஆண்டிற்கு பிற்போடப்பட்டிருந்தது.

| **செயற்திட்டம்** | **மதிப்பிடப்பட்ட தொகை** | **2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினம்** |
|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** |
| பாதுக்க | 8,242,646 | 3,000,000 |
| சண்டிலிப்பாய் | 9,446,694 | 2,000,000 |
| சாய்ந்தமருது | 9,855,124 | 2,000,000 |
| நல்லூர் | 9,195,599 | 2,000,000 |
| கஹவத்த | 6,565,376 | 2,000,000 |

**3.5 செயலாற்றல்**

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி, அமைச்சால் எய்தப்பட வேண்டிய முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) போதியளவில் மேற்கொள்ளப்படாத பிரதான செயற்பாடுகள்

அமைச்சின் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்குரிய பின்வரும் செயற்பாடுகள் போதியளவில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| **விதாதா நிகழ்ச்சித்திட்டம்** | **இலக்கு** | **முன்னேற்றம்** |
|---|---|---|
| (i) விதாதா நிகழ்ச்சித்திட்டக் கழகங்களை உருவாக்கல் | | |
| • தேசிய நிலை | 1 | இல்லை |
| • மாவட்ட நிலை | 22 | 16 |

| | | | |
|---|---|---|---|
| | • விதாதா நிலை | 260 | 200 |
| (ii) | தேசிய தொழில்நுட்பக் கையளிப்பை ஏற்படுத்தி செயற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் (என்என்ரீஜ) | 520 | 302 |
| (iii) | உயர் ரீரீ நிகழ்ச்சித்திட்டங்கள் (Advance TT Programmes) | 50 | இல்லை |
| (iv) | முகாமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 520 | 336 |
| (v) | விதாதா தொழில்நுட்ப கையேற்புச் சான்றிதழ் மற்றும் உற்பத்தி நுழைவு (Sticker) வழங்கல் நலன்பெறுனர் எண்ணிக்கை | 500 | இல்லை |
| (vi) | 50 நலன்பெறுனர்களுக்காக நடமாடும் கடைகள் வழங்கல் (Providing Portable Stall) | 50 | இல்லை |
| (vii) | Educational blog Prabashvara (Internet) blog posts | 2600 | 408 |
| (viii) | பாடசாலை அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் | 1300 | 1042 |
| (ix) | Exploration & Mapping Local Resource (Resources Profiles) | 261 | 111 |
| (x) | தொழில்நுட்பம் தொடர்பான செயற்திட்டத்தை ஏற்படுத்தல் | 120 | இல்லை |

| | | | |
|---|---|---|---|
| (xi) | தொழில்நுட்பம் தொடர்பான செயற்திட்டத்தை ஏற்படுத்தல் - நீர் (நலன்பெறுனர்கள்) | 150 | இல்லை |

**(ஆ) திட்டமிடல்**

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கிணங்க செயற்படாமை**

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) அமைச்சு, விஞ்ஞான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் Technology market place செயற்பாட்டிற்காக ஓர் கண்காட்சியை நடாத்துவதற்கு இலக்கிட்டிருந்ததுடன் இதற்காக அமைச்சு மட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தில் விஞ்ஞான வாரம் நடாத்தப்பட்டிருந்தது.

(ii) கிழக்கு உதயம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பல்வேறு செயற்திட்டங்களுக்காகவும் விதாதா வள நிலையங்களுக்காகவும் ரூபா 5 மில்லியன் தொகையான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது இதில் எவ்வித செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்**

அமைச்சால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானவையாகக் காணப்பட்டன. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட அத்தகைய சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

(அ) பிளாஸ்டிக் கழிவுப் பொருட்களின் மூலம் பெற்றோலிய எரிபொருளாக மாற்றமடையும் செயற்திட்டத்திற்காக ரூபா 12 மில்லியன் தொகை மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதற்காக ரூபா 26 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது. இது

தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 12 மில்லியன் தொகை மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் அம் மதிப்பிடப்பட்ட செலவினத்திற்கு மேலாக ரூபா 26 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ii) பிளாஸ்டிக்கின் மூலம் எரிபொருள் உற்பத்தியாக்கும் தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்ததாகக் கருதி அத்தகைய சிக்கலான இராசயன செயற்பாடொன்று தொடர்பான அறிவைக் கொண்டிராத ஓர் வியாபாரிக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 900,000 தொகையும் முன்னைய இரு ஆண்டுகளுக்காக ரூபா 1,800,000 தொகையுமாக ரூபா 2,700,000 தொகையுமான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(iii) தற்போது அமைச்சிடம் உள்ள பொலிப்டோ லங்கா தனியார் கம்பனிக்கு 2009 ஆம் ஆண்டு முதல் 2015 யூன் 23 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது ரூபா 155.57 மில்லியன் தொகையான நிதி திறைசேரியால் வழங்கப்பட்டிருந்த போதிலும் பிளாஸ்ரிக் கழிவுப் பொருள் எரிபொருளாக மாற்றியமைக்கும் செயற்திட்டச் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு 2015 யூன் 23 ஆம் திகதி வரையிலும் முடியாதிருந்தது. இதன் காரணமாக பொது மக்களுக்குக் கிடைக்கப்பெற வேண்டிய நலன் கிடைக்கப்பெறாது போயிற்று.

(ஆ) அமைச்சால் உபகரணங்கள் கொள்வனவிற்காக ரூபா 348.4 மில்லியன் தொகை சிலின்டெக் கம்பனிக்குச் செலுத்தப்பட்டிருந்தது. அந்த உபகரணங்களின் பராமரிப்பிற்காக பிற்காலத்தில் செலுத்தப்பட வேண்டிய ரூபா 7.5 மில்லியன் தொகையும் கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தின் போதே செலுத்தப்பட்டிருந்தது.

(இ) கணனி முறைமைக்காகப் பயன்படுத்தப்பட்ட வீஜீஏ அட்டை (Used VGA Card) பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் இதன் காரணமாக கணனி முறைமையின் செயற்பாடு சிக்கலான நிலைக்கு உட்பட்டிருந்தது.

## 3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் ஏற்படுத்தப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்ற விதத்தில் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அத்தகைய சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

### (அ) கொள்வனவு நடைமுறையிலிருந்து விலகல்

அமைச்சின் கீழ் உள்ள கோள்மண்டலத்தில் கணிப்பு இயந்திரத்தை ஸ்தாபிப்பதற்காக அதற்கு இணையான நிறுவகத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 556,174 செலவினத்திற்காக கொள்வனவு நடைமுறை வழிகாட்டலின் படி, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சின் கீழ் உள்ள பொலிப்டோ லங்கா கம்பனியின் செயற்திட்டப் பதவியணிக்கான சம்பள அளவுத்திட்டத்தைத் தீர்மானிப்பதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) 2004 ஆகஸ்ட் 31 ஆம் திகதிய 353(5) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்திக்கு மாறாக அமைச்சின் கீழ் உள்ள பொலிப்டோ லங்கா தனியார் கம்பனியின் தேவைப்பாட்டிற்காக 2014 மே மாதம் முதல் மாதாந்தம் ரூபா 105,000 படியான வாடகைக் கொடுப்பனவு அடிப்படையில் ஓர் வாகனம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

## 3.8 நட்டங்களும் இழப்புகளும்

அமைச்சால் கோள்மண்டலத்திற்காக கணிப்பு இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்படுகையில் குறித்த காலப்பகுதியில் குறித்த செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிராமையால் ரூபா 116,255 தொகையான அந்நிய செலாவணி நட்டம் ஏற்பட்டிருந்தது.

**3.9 மனித வள முகாமைத்துவம்**

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 23 | 18 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 03 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 768 | 657 | 111 |
| (iv) | ஆரம்ப நிலை | 234 | 234 | - |
| (v) | ஏனையவை (அமையம்/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 02 | 02 | - |
| | மொத்தம் | **1,031** | **914** | **117** |

**(ஆ) முறையற்ற விதத்தில் வேறு தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனித வளங்கள்**

அமைச்சால் மீளாய்வாண்டின் போது வேறு தரப்பினருக்கு முறையற்ற விதத்தில் விடுவிக்கப்பட்டிருந்த வளங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும்.

| ஊழியர் வகை | எண்ணிக்கை | ஏனைய தரப்பினர் | விடுவிக்கப்பட்ட காலப்பகுதி |
|---|---|---|---|
| விதாதா தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் | 01 | அடிப்படைக் கல்வி நிறுவகம் | 2013.12.24 முதல் |

| | | | |
|---|---|---|---|
| மேற்படி | 01 | இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி நிறுவகம் | 2012.11.01 முதல் |
| மேற்படி | 01 | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் | 2011.07.02 முதல் |
| மேற்படி | 01 | இலங்கை தொண்டர் கடற்படை தலைமையகம் | 2012.07.11 முதல் |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01 | பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு | 2014.12.01 முதல் |

(இ) களஉத்தியோகத்தர்களை அமைச்சில் வைத்துக்கொள்ளல்

-----------------------------------------------------------------------------------------------------

களத்தில் கடமைகளை மேற்கொள்வதற்காக சேர்க்கப்பட்டிருந்த விதாதா கள உத்தியோகத்தர்கள் மூவர் விதாதா வள நிலையங்களில் கள உத்தியோகத்தர்களிற்கான வெற்றிடம் நிலவுகையில் அமைச்சின் விதாதா கிளை நடவடிக்கைகளுக்காக வைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.